பக்கம்.

**கூடுதல் மாவட்ட நீதிமன்றம், திண்டுக்கல்.**

**அசல் வழக்கு எண். 234/2021**

**வா.சா.–1 –கார்த்தி , க/பெ.பாலசுப்பிரமணியன்**

**நாள். 24.04.2026**

**வா.சா.1 இன்று ஆஜராகி சத்திய பிரமாணம் செய்யப்பட்டு பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணையின் தொடர்ச்சி**

பிரதிவாதியின் 2 வது மகன் 02.06.2014 ல் திருமணம் நடந்தது என்றால் சரிதான். என் அப்பா ரெங்கசாமி 10.11.2016 ல் இறந்து விட்டார் என்றால் சரிதான். என் தாயார் 22.11.2016 ல் இறந்து விட்டார் என்றால் சரிதான். பிரதிவாதி கட்டப்பஞ்சாயத்து செய்ய ஆட்களை அனுப்பினார் என்று முந்தைய விசாரணையில் சொல்லியுள்ள விவரத்தை தாவா வழக்கிலும், பிரமாண வாக்குமூலத்திலும் சொல்லவில்லை என்றால் சரிதான். அது சம்மந்தமாக எதாவது புகாரோ, சட்ட மேல் நடவடிக்கையோ எடுத்தேனா என்றால் இல்லை. நான் வழக்கிற்காக பொய்யாக அவ்வாறு சொல்கிறேன் என்றால் சரியல்ல. என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ.4 அடமான பத்திரத்தில் உள்ள விவரங்கள் எனக்கு தெரியுமா என்றால் தெரியும். வா.சா.ஆ.4. என் கணவர் சொல்லிதான் எழுதப்பட்டதா என்றால் இல்லை, நான்தான் சொல்லி தயார் செய்யப்பட்டது, என் கணவர் அந்த சமயத்தில் இருந்தாரா என்றால் இல்லை. அந்த சமயத்தில் உண்மையில் என் கணவர் என்னுடன் இருந்தார் என்பதை சாட்சிகளை விசாரித்தால் தெரியும் என்றால் சரியல்ல. வா.சா.ஆ.4 ஆவணத்தில் உள்ள சாட்சிகள் என் கணவர் மற்றும் ஆவண எழுத்தர், அவர்களை விசாரித்தால் தெரியும். 06.06.2015 அன்று என் கணவர் வெளிநாடு சென்று விட்டார். என் கணவரின் கடவுச்சீட்டை தாக்கல் செய்ய தயாராக உள்ளேனா என்றால் தயாராக உள்ளேன். வா.சா.ஆ.4.ல் பணம் எப்படி கொடுத்ததாக சொல்லப்பட்டுள்ளது என்றால் ரூ.5 லட்சம் என் குடும்ப அத்தியாவசிய செலவுக்காக நாளது தேதியில் தங்களிடம் ரொக்கம் பெற்றுக் கொண்டேன் என சரத்து கண்டுள்ளது என்றால் சரிதான். மேற்படி ரொக்க தொகை சப்ரிஜிஸ்டர் முன்பாக கொடுத்தேனா அல்லது எங்கு வைத்து கொடுத்தேன் என்றால் கரூர் வைசியா வங்கியில் வைத்து 05.06.2015 ல் பிரதிவாதியிடம் கொடுத்தேன். வா.சா.ஆ.4. எழுதிய 25.06.2015 ல் பணம் ரொக்கமாக கொடுக்கவில்லை என்றால் அன்றைய தேதி கொடுக்கவில்லை, முன்பே கொடுத்து விட்டேன். முன்பே ரூ.5 லட்சம் கொடுத்து விட்டேன் என்பதை வா.சா.ஆ.4 ல் சொல்லியுள்ளேனா என்றால் சொல்லவில்லை. நான் ரூ.5 லட்ச ரூபாய் கொடுத்ததாக சொல்லும் அடமானகடன் பத்திரம் ஏற்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல. வா.சா.ஆ.4 ல்

என் தரப்பில் ஜெயராமன் சாட்சியாகவும், பிரதிவாதி தரப்பில் யார் சாட்சி கையெழுத்திட்டார் என்றால் ஹக்கீம் சேட் என நினைக்கிறேன். ஜெயராமன், த/பெ. திருப்பதி என் சகோதரி மீனாட்சியின் பையன் ஆவார். சாட்சி ஜெயராமன், ஹக்கீம் சேட் ஆகியோரை விசாரித்தால் வா.சா.ஆ.4. எவ்வாறு ஏற்படுத்தப்பட்டது என்பது தெரியும் என்றால் சரிதான். பணம் ரூ.5 லட்சம் முழுவதும் என் கணவர் பணமா என்றால் ஆமாம். வா.சா.ஆ.4 ல் கண்டுள்ள ரூ.5 லட்சத்திற்கு எனது கணவரின் வங்கி கணக்கு, வருமான வரியை பார்த்தால் நிதி ஆதாரம் தெரியும் என்றால் சரிதான். என் கணவருக்கு எந்த தேதியில் வங்கி கணக்கும், வருமான வரி கணக்கு உள்ளது என்றால் வருமான வரி 2,3 வருடங்களாக கட்டி வருகிறோம், வங்கி கணக்கு 28 வருடங்களாக என் கணவர் பெயரிலும், என் பெயரில் சேர்ந்து ஜாயிண்ட் அக்கவுண்ட்டாக கனரா வங்கியில் உள்ளது. நான் தாக்கல் செய்துள்ள தாவா வழக்கின் பிராதிலும், பிரமாண வாக்குமூலத்திலும் என் கணவர் பணத்தை தான் கொடுத்ததாக சொல்லவில்லை என்றால் சரிதான். எனது கணவரின் வங்கி கணக்கு பாஸ்புக்கை தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்யவில்லை, தேவைப்பட்டால் தாக்கல் செய்ய தயாராக உள்ளேன். என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ.1.ஆவணம் எனது தனிநபர் சேமிப்பு கரூர் வைசியா வங்கி , திருநகர் கிளை கணக்கு பாஸ்புக் ஆகும். வா.சா.ஆ.1 ல் உள்ள வரவு செலவு கணக்கு பற்றிய விவரங்கள் எனக்கு தெரியும். இந்த வங்கி கணக்கு 04.12.2013 ல் தொடங்கப்பட்டது என்றால் சரிதான். என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ.5. ஆவணத்தில் ரூ.10 லட்சத்திற்கான ஈட்டு கடன் பத்திரத்தில் உள்ள விவரங்கள் எனக்கு தெரியும். அதில் பிரதிவாதி ரூ.10 லட்சம் என்னிடம் ரொக்கமாக வாங்கியதாக எழுதப்பட்டுள்ளது என்றால் சரிதான். அந்த ஆவணம் 02.11.2017 ல் ஏற்படுத்தப்பட்டுள்ளது. வா.சா.ஆ.5 எழுதப்பட்ட போது என் கணவர் வெளிநாட்டில் இருந்தார். மேற்படி ரூ.10 லட்ச தொகை எங்கு வைத்து கொடுக்கப்பட்டது என்றால் எனது வீட்டில் வைத்து கொடுக்கப்பட்டது. வா.சா.ஆ.5 ல் குறிப்பிடப்பட்டுள்ள கதவு எண். 22. மெயின்ரோடு, நெல்லையப்பபுரம், திருநகர் , மதுரை என்பது எனது பெற்றோரின் விலாசம் என்றால் சரிதான். வா.சா.ஆ.5. ஆவணம் ஏற்படுத்தப்பட்ட போது என் பெற்றோர் உயிருடன் இல்லை என்றால் சரிதான். பிரதிவாதி என்னிடம் ரூ.10 லட்சம் வாங்கியதாக சொல்லும் போது நெல்லையப்பபுரம், கதவு எண். 17/18, 2 வது தெருவில் வசித்து வந்தேன். அந்த ரொக்க தொகை கொடுக்கும் போது என்னுடன் யார், யார் இருந்தார்கள் என்றால் வா.சா.ஆ.5 ல் சாட்சி கையொப்பமிட்டவர்களும், பிரதிவாதியும் உடன் இருந்தார்கள். வா.சா.ஆ.5 ஆவணத்தில் செல்லமுத்து ராஜாவும், சடையாண்டியும் சாட்சி கையொப்பம் போட்டுள்ளார்கள். தாவா வழக்கில் தாக்கல் செய்துள்ள எதிருரையில் உள்ள சங்கதிகளை படித்து பார்த்து தெரிந்து கொண்டேனா என்றால் தெரிந்து கொண்டேன்.

வா.சா.ஆ.5. ஆவணத்தில் உள்ள 2 வது சாட்சியான சடையாண்டி கவிதாவின் சித்தப்பா என்றால் எனக்கு தெரியாது. நான் சடையாண்டியை வரவழைத்துதான் வா.சா.ஆ.5.ஆவணத்தை தயார் செய்தேன் என்றாலும் வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. கவிதாவையும், சடையாண்டியையும் அழைத்து விசாரிக்க எனக்கு ஆட்சேபணை இல்லை என்றால் அவர்களுக்கும் ஈடுபத்திரத்திற்கும் சம்மந்தம் இல்லாததால் அவர்கள் தேவையற்ற சாட்சி ஆகும். ரூ.10 லட்சம் நான் கொடுத்ததாக சொல்லும் தொகை எந்த ரூபாய் நோட்டுக்கள் என்றால் 500 ரூபாய் 20 பண்டல்கள் ஆகும். ரூ.10 லட்சத்தை எத்தனை மணிக்கு கொடுத்தேன் என்றால் 02.11.2017 அன்று காலை 08.00 மணிக்கு வாங்கிவிட்டு நேரடியாக பத்திர அலுவலகம் சென்று வா.சா.ஆ.5 ஐ பதிந்து விட்டோம். மேற்படி பணத்திற்கு டினாமினேசன் எழுதி கொடுத்தேனா என்றால் இல்லை. அந்த தொகையை சரிபார்த்து எண்ணி வாங்கினார்களா என்றால் அது பேங்க் கட்டுகளாகவும், என் கணவர் வெளிநாட்டிலிருந்து கொடுத்தனுப்பிய ரொக்கத் தொகையாக இருந்ததால் எண்ணி வாங்கி கொண்டார்கள். குறிப்பாக எத்தனை வங்கி கட்டுக்கள் என்று எனக்கு ஞாபகம் இல்லை. ரூ.10 லட்சம் பணம் நான் எந்த காலத்திலும் பிரதிவாதிக்கு கொடுக்கவில்லை என்றால் சரியல்ல. வா.சா.ஆ.1.லிருந்து எந்த தொகையும் வா.சா.ஆ.5 ல் கண்டுள்ள ரூ.10 லட்சத்திற்கு கொடுக்கவில்லை என்றால் சரிதான். வா.சா.ஆ.4 ல் கண்டுள்ள ரூ.5 லட்சம் தொகை வா.சா.ஆ.5 ல் கண்டுள்ள ரூ.10 லட்ச தொகைக்கு உள்ளடங்கியதா என்றால் சரியல்ல, தனித்தனியாக கொடுக்கப்பட்ட தொகைக்கு ஏற்படுத்தியவை ஆகும். ரூ. 5 லட்ச தொகை எப்போது கொடுத்தேன் என்றால் 05.06.2015. அந்த தொகைக்கு மாத வட்டி தொகை எவ்வளவு என்றால் எனக்கு தெரியாது. ரூ.5 லட்ச ரூபாய்க்கு வட்டி, அசல் கொடுக்காததால் எழுத்து மூலமாக அறிவிப்பு எதுவும் கொடுத்தேனா என்றால் 30.03.2019 ல் பிரதிவாதிக்கு கொடுத்தேன். வா.சா.ஆ.7. நான் அனுப்பிய வழக்கறிஞர் அறிவிப்பு என்றால் சரிதான், அதில் உள்ள விவரங்கள் நான் சொல்லியது தான். வா.சா.ஆ.7 ல் கரூர் மாவட்டத்தை சேர்ந்த பசுபதிபாளையத்தை சேர்ந்த சங்கர்கணேசன் மனைவி கவிதா என்பவருக்கு நான் அனுப்பிய வழக்கறிஞர் அறிவிப்பு என்றால் சரிதான். கவிதாவை எனக்கு தெரியுமா என்றால் எனது சகோதரி ராமதிலகத்தின் நெருங்கிய நண்பர் என்ற முறையில் தெரியும். 2013 ம் வருடத்திலிருந்து நான், கவிதா, ராமதிலகம், ராமதிலகம் வீட்டிற்கு அருகில் உள்ள சித்ரா, மதுரை மாவட்டம் வாடிப்பட்டியை சேர்ந்த தங்கமணி, அவரது மகள் முத்துலெட்சுமி ஆகியோர்கள் சேர்ந்து பணத்தை இரட்டிப்பாக்கும் தொழில் செய்து வந்தோம் என்றால் அது குறித்து எனக்கு எதுவும் தெரியாது. இது சம்மந்தமாக 06.11.2014 ல் திண்டுக்கல் பொருளாதார குற்ற பிரிவு காவல்நிலையத்தில் தங்கமணி வகையறா ரூ.70 லட்சம் மோசடி செய்ததாக பிரதிவாதி உயர்நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்து குற்ற வழக்கு பதியப்பட்ட விவரம் எனக்கு தெரியுமா என்றால்

தெரியாது. மேற்படி விசயம் நாளிதழில் செய்தியாக வந்துள்ளது என்றால் எனக்கு நேரடியாக தெரியாது. ரூ.70 லட்ச ரூபாய் மோசடி வழக்கில் நானும் என் கணவரும் சேர்ந்து தங்கமணியிடம் எவ்வளவு ரூபாய் கொடுத்து ஏமாந்தோம் என்றால் நாங்கள் அவ்வாறு எந்த பணமும் கொடுத்து ஏமாறவில்லை. நான் கவிதாவுக்கு எவ்வளவு பணம் கொடுத்தேன் என்றால் 03.03.2020 ல் ரொக்கமாக ரூ.3 லட்சம் கொடுத்தேன். வா.சா.ஆ.7 ல் மேற்படி கவிதா என்பவருக்கு 03.11.2017 ல் கரூர் மாவட்டம், கிருஷ்ணராயபுரம், , சார்பதிவாளர் அலுவலகத்தில் ஆவணம் எண்.2147/2017 ல் ரூ.3 லட்சத்திற்கு அடமானம் ஏற்படுத்தியதாக கண்டுள்ளது என்றால் சரிதான். எனது சகோதரி ராமதிலகம் மூலம்தான் மேற்படி கவிதாவை பழக்கம் என்று வா.சா.ஆ.7 ல் சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். வா.சா.ஆ.5 ஆவணம் ஏற்படுத்திய 02.11.2017 க்கு அடுத்த நாள்தான் மேற்படி ஆவணம் ரூ.3 லட்சத்திற்கு கவிதாவிடம் ஏற்படுத்தப்பட்டது என்றால் சரிதான். மேற்படி கவிதா எந்த ஆவணத்திற்கு ஈட்டுக்கடன் பத்திரம் எழுதிக் கொடுத்தாரா அதே ஆவணத்தை 03.03.2020 அன்று கிரையம் செய்து வாங்கி விட்டேன் என்றால் சரிதான். கவிதா, அவரது சித்தப்பா சடையாண்டி, தங்கமணி, சித்ரா, ஆகியோர்களை சாட்சியாக வைத்து விசாரித்தால் உண்மை நிலவரம் தெரிய வரும் என்றால் சரியல்ல. வா.சா.ஆ.7 ல் கண்ட கவிதாவுக்கு அனுப்பிய அறிவிப்பை இந்த வழக்கில்தாக்கல் செய்ததற்கான சிறப்பு காரணம் உண்டா என்றால் அவர் பிரதிவாதியின் நண்பர் என்ற முறையில் தாக்கல் செய்தேன். நான் மேற்சொன்ன காரணங்களை என் பிரமாண வாக்குமூலத்திலும், தாவாவிலும் சொல்லவில்லை என்றால் சரிதான். கவிதாவுக்கும், என் சகோதரி திலகத்திற்கும் 30.03.2019 ல் தான் வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பினேன் என்றால் சரிதான். வா.சா.ஆ..4.ல் எவ்வளவு நாளில் ஈட்டுக்கடனை தீர்க்க வேண்டும் என கண்டுள்ளது என்றால் 1 வருட காலம் ஆகும். எப்போது கால அவகாசம் முடிந்தது என்றால் 25.06.2016 ஆகும். அந்த கால அவகாசம் முடிந்த பின்பு எழுத்து மூலமான அறிவிப்பு உடனே கொடுத்தேனா என்றால் இல்லை, வாய்மூலமாக அக்கா என்பதால் கேட்டு வந்தேன். ரூ.5 லட்சத்திற்கு எவ்வளவு சொத்து மதிப்பு போட்டுள்ளேன் என்றால் ரூ.6 லட்சம் போட்டுள்ளேன். பொதுவாக பெரிய தொகை கடன் கொடுப்பவர்கள் அந்த தொகையிலிருந்து 3 மடங்கு சேர்த்துதான் மதிப்பு போட்டு எழுதுவார்கள் என்றால் அக்கா என்பதால் நான் பார்க்கவில்லை. என் சகோதரி என் கணவருக்கும் எனக்கும் இருந்த பண பிரச்சனைகள் காரணமாக என் சகோதரி நல்ல எண்ணத்தில் எழுதிக் கொடுத்த பத்திரங்கள் என்றாலும் உண்மையில் ஈடுகடனுக்காக அவை எழுதிக் கொடுக்கவில்லை என்றாலும் சரியல்ல. ஏற்கனவே ரூ.5 லட்சம் அசல் மற்றும் வட்டியுடன் சேர்த்து பாக்கி இருக்கும் சமயத்தில் கூடுதலாக ரூ.10 லட்சம் வட்டிக்கு கொடுத்தேன் என்றால் என் சகோதரி கடன் சுமை அதிகமாக இருப்பதாக சொன்னதால் அதே சொத்தில் ஈட்டுக்கடனுக்காக எழுதிக் கொடுத்தார். ரூ.10 லட்சம்

ரூபாயில் ஏற்கனவே கொடுக்கப்பட்ட ரூ.5 லட்சம் தொகை வட்டியுடன் சேர்த்து கழித்துக் கொண்டுதான் ஏற்படுத்தியிருக்க வேண்டும் என்றால் சரியல்ல. தாவா வழக்கில் திருத்தப்பட்ட தாவா தாக்கல் செய்யப்பட்டது தெரியும். வா.சா.ஆ.1ல் ரூ.5 லட்சம் 05.06.2015 அன்று வங்கி கணக்கு மூலம் பரிமாற்றம் செய்தததாக திருத்தம் செய்யப்பட்டது என்றால் சரிதான். வா.சா.ஆ.2. ஆவணத்தை பூர்த்தி செய்தது யார் என்றால் எனது சகோதரியின் மகன் ஜெயராமன் எழுதியது. அதில் கண்டுள்ள பரிவர்த்தனை விவரம் என்னவென்றால் காசோலை என்று குறிப்பிடப்பட்டுள்ளது. அன்றைய தேதியில் கரூர் வைசியா , திரு நகர் வங்கி கிளையில் நானும் , எனது கணவரும், ஜெயராமன், ராமதிலகம், ஆகியோர் இருந்தோம். வங்கியிலிருந்து தொகையை பிரதவாதிக்கு ரொக்கமாக கொடுத்திருக்கலாமே என்றால் என் கணவர் அவசரமாக சௌதி அரேபியாவுக்கு கிளம்பியதால் பிரதிவாதி கேட்டுக் கொண்டதற்கிணங்க அவரது வங்கி கணக்கில் பரிமாற்றம் செய்தோம். பிரதிவாதி பெயரில் என் நகைகளை சிட்டி யூனியன் வத்தலக்குண்டு கிளையில் அடகு வைத்து பணம் கொடுத்தார் என்றால் இல்லை. நான் 05.06.2015ல் பணம் அனுப்பிய அடுத்தநாள் அந்த நகைகளை திருப்பி என்னிடம் ஒப்படைத்தார் என்றால் சரியல்ல. மேற்படி நகைகள் வங்கி மூலம் ஏல அறிவிப்பு வந்தவுடன் அவசரமாக நான் பணம் கொடுத்தேன் என்றால் சரியல்ல. அது சம்மந்தமாக அந்த வங்கி கிளையை விசாரிக்க எனக்கு ஆட்சேபணை இல்லை. என்னிடம் காட்டப்படும் நகைக்கடன் விண்ணப்பம் தென்காசியில் பாண்டியன் கிராம வங்கியில் நான் எனது சொந்த செலவிற்காக நான் எழுதிய நகைக்கடன் விண்ணப்பம் ஆகும். அது **பி.வா.சா.ஆ.1** ஆகும். அதே தேதியான 04.11.2017 என் சகோதரி லெட்சுமி, மற்றும் ராமதிலகம் பெயர்களில் என் நகையை வைத்து நகை கடன் மூலம் பணம் பெற்றுள்ளேன் என்றால் சரியல்ல. அதே தேதியில் 3 பேர்களும் நகை கடன் வாங்க தென்காசி, இடைக்கால்கிளை, பாண்டியன் கிராம வங்கிக்கு சென்றது உண்மைதான், ஆனால் அவரவர்கள் நகைகளை வைத்து அவரவர்கள் கடன் பெற்றோம். அந்த சமயத்தில் என் கணவர் வந்தாரா என்றால் இல்லை. வா.சா.ஆ.4, வா.சா.ஆ.5 ஆகியவை என் சகோதரி ராமதிலகத்தின் மகன்களுக்கு தெரியாமல் தான் ஏற்படுத்தப்பட்டது என்றால் சரிதான். வா.சா.ஆ.4 எழுதும் போதும் என் பெற்றோர்களுக்கு தெரியாமல் எழுதப்பட்டது என்றால் சரிதான். எதிர்வழக்குரையில் ரூ.17 லட்சம் வரை பிரதிவாதி ராமதிலகத்திற்கு நான் கொடுக்க வேண்டும் அதில் அவருக்கு நான் ரூ.5 லட்சம் கொடுத்து விட்டேன் என்றும், பாக்கி ரூ.12 லட்சம் நான் கொடுக்க வேண்டும் சொல்லப்பட்டுள்ளது என்றால் அது தவறாகும். மேற்படி சங்கதியை மறுத்து நான் எனது வாக்குமூலத்தில் எதுவும் சொல்லவில்லை என்றால் சரியல்ல. தங்கமணியிடம் நானும், எனது கணவரும் சேர்ந்து ரூ.20 லட்சம் வரை பணம் முதலீடு செய்து ஏமாந்து போனதால் பிரதிவாதியிடம் மேற்படி பணத்திற்கு நீதான் பொறுப்பு என்றும் மேற்படி பணத்தை திருப்பி கொடுக்க வேண்டும் என்றும்

திருப்பி கொடுக்கும் வரைக்கும் பிரதிவாதி சொத்தை பொறுத்து அடமான பத்திரம் ஏற்படுத்தி கொண்டோம் என்றால் சரியல்ல. பிரதிவாதி எந்த காலத்திலும் பணம் வாங்க வேண்டிய அவசியம் இல்லை என்றால் சரியல்ல. 2 அடமான பத்திரங்களை பொறுத்து பிரதிவாதி எந்த காலத்திலும் கடனுக்காக ஈடு அடமான பத்திரம் எழுதிக் கொடுக்க வேண்டும் என்ற எண்ணத்துடன் எழுதிக் கொடுக்கவில்லை என்றால் சரியல்ல. தாவா கடனை பொறுத்து பிரதிவாதி எனக்கு சட்டப்படி எந்த கடனும் செலுத்த வேண்டிய அவசியமில்லை என்றால் சரியல்ல. நான் சுத்தமான கரங்களுடன் தாவா வழக்கை தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. பிரதிவாதியை பொறுத்து வழக்கு தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்றால் சரியல்ல.

**மறு விசாரணை – இல்லை.**

/ஒப்பம்/

XXXXXXX

Taken down by me in open court read over to the witness, admitted by him to be correct this contains a full and true account of the statement Made by the witness.

SWARNAM J RAJAGOPALAN

Digitally signed by SWARNAM J RAJAGOPALAN
Date: 2026.04.27 21:12:17 +0530

Additional District and Sessions Judge,

Dindigul.